தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

24.06.2013 A.M

## சிறுதானிய உற்பத்தியை பெருக்க வேண்டும்



சிறுதானியங்களின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று வேளாண்துறை அமைச்சர் செ.தாமோதரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு வேளாண்துறை சார்பாக பாரம்பரிய வேளாண் பொருள்கள் விழிப்புணர்வு மாநிலக் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி சென்னையில் அண்மையில் நடைபெற்றது.

இதில் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள், வேளாண்துறை அலுவலர்கள், வேளாண் பல்கலைக்கழக அறிஞர்கள், அரவை ஆலை உரிமையாளர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர்.

கருத்தரங்கம் மற்றும் கண்காட்சியைத் தொடங்கி வைத்து அமைச்சர் பேசியது:

30 ஆண்டுகளுக்கு முன்பு வரை சிறுதானியங்களே பிரதான உணவாக இருந்தது. ஆனால் இன்று நாம் சிறுதானியங்களை அதிகமாக உற்பத்தி செய்வதுமில்லை, உண்பதுமில்லை.

1980-களில் 34 லட்சம் ஏக்கர்களில் பயிரிடப்பட்ட சிறுதானியங்கள் தற்போது 10 லட்சம் ஏக்கர்களில் மட்டுமே பயிரிடப்படுகிறது. சிறுதானியங்களின் உற்பத்தியைப் பெருக்கி, பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும்.

இதற்காக கடந்த ஆண்டில் 375 மெட்ரிக் டன் சிறுதானிய விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளது.

2013-14-ல் 480 மெட்ரிக் டன் விதைகள் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. பாரம்பரிய வேளாண்மைக்காக தமிழக முதல்வர் ரூ.10 கோடி ஒதுக்கியுள்ளதாக தெரிவித்தார் அமைச்சர் தாமோதரன்.

இந்நிகழ்ச்சியில் மேயர் சைதை துரைசாமி, வேளாண் துறை இயக்குநர் மு.ராஜேந்திரன், வேளாண்துறை முதன்மைச் செயலர் சந்தீப் சக்சேனா, மாநிலத் திட்டக்குழுத் துணைத் தலைவர் சாந்தா ஷீலா நாயர் ஆகியோர் பங்கேற்றனர்.

## வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை

வங்கக்கடலில் வடக்கே குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது. இதனால் இன்று ஆந்திரத்தில் பலத்த மழைபெய்யும் என்றும், இந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தில் ஓரிரு இடங்களில் கன மழை பெய்யும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழகம், புதுச்சேரியில் இன்று ஓரிரு இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

தமிழகத்தில் ஞாயிற்றுக்கிழமைஅதிகபட்சமாக சின்னக்கல்லாறில் 110 மழை பதிவானது.

வெயில் அளவு(ஃபாரன்ஹீட்டில்): புதுச்சேரி - 102, கடலூர், சென்னை- 100, நாகப்பட்டினம், வேலூர் - 97, மதுரை - 96, காரைக்கால் - 95, தூத்துக்குடி - 94.

## பாபநாசம் அணை நீர்மட்டம் 100 அடியை நெருங்குகிறது

மேற்குத் தொடர்ச்சி மலையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையால் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 143 அடி கொள்ளளவு கொண்ட பாபநாசம் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை 100 அடியை எட்டும் நிலையில் உள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை நீடித்து வருகிறது. இதனால், இந்த மாவட்டத்தில் உள்ள அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டமும் வேகமாக உயர்ந்து வருகிறது. ராமநதி அணை நிரம்பியதை அடுத்து, அணையில் இருந்து உபரி நீர் திறக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணையில் 1 மி.மீ. மழையும், சேர்வலாறு அணையில் 4 மி.மீ. மழையும், மணிமுத்தாறு அணையில் 5.2 மி.மீ. மழையும், கடனாநதி அணையில் 5 மி.மீ. மழையும், ராமநதி அணையில் 4 மி.மீ. மழையும், அம்பாசமுத்திரத்தில் 16.2 மி.மீ. மழையும், சேரன்மகாதேவியில் 6 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

பாபநாசம் அணைக்கு நொடிக்கு 3083.22 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையின் நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 97 அடியாக இருந்தது. அணையில் இருந்து கார்பருவ சாகுபடிக்காக 1005 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. அணையின் நீர்வரத்து 3,000 கன அடியாக இருப்பதால் நீர்மட்டம் 100 அடியை எட்டும் நிலையில் உள்ளது.

சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 3 அடி உயர்ந்து 112.20 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 70.43 அடியாகவும் இருந்தது. மணிமுத்தாறு அணைக்கு நொடிக்கு 115 கன அடி நீர்வரத்து இருந்தது. அணையில் இருந்து

பாசனத்துக்கு 275 கன அடி திறந்து விடப்பட்டுள்ளது.

கடனாநதி அணையின் நீர்மட்டம் 3 அடி உயர்ந்து 72.50 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 321 கன அடி நீர்வரத்து இருந்தது. அணைக்கு நீர்வரத்து கணிசமாக இருப்பதால் 84 அடி கொள்ளளவு கொண்ட இந்த அணை ஓரிரு நாளில் நிரம்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ராமநதி அணை நிரம்பியுள்ள நிலையில், அணையின் நீர்மட்டம் 82 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 141 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து 73 கன அடி தண்ணீர் ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கு சிறப்பு முகாம்

தோவாளை வட்டம், பூதப்பாண்டியில் விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசனத் திட்ட சிறப்பு முகாம் நடைபெற்றது.

தோவாளை வட்டார தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் நிஜாமுதீன் தலைமை வகித்தார். சிறு, குறு மற்றும் இதர விவசாயிகளுக்கு 100 சதவீதம் மற்றும் 75 சதவீத நுண்ணீர் பாசனம் அமைக்க பட்டா, சிட்டா அடங்கல் விவசாயிகளுக்கு உடன் சான்றிதழ் வழங்கப்பட்டது. வேளாண் அலுவலர்கள் மாசிலாமணி, பகவதிநாயுடு, ஆறுமுகம் பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மேட்டூரிலிருந்து தண்ணீர் திறப்பு அதிகரிப்பு

மேட்டூர் அணையில் இருந்து குடிநீர்த் தேவைக்காக திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு ஞாயிற்றுக்கிழமை காலை நொடிக்கு 900 கன அடியாக அதிகரிக்கப்பட்டது.

சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் இருந்து ஆண்டுதோறும், ஜூன் 12-ஆம் தேதி டெல்டா மாவட்டங்களின் பாசனத் தேவைக்காக தண்ணீர் திறந்துவிடப்படும்.

இந்த நிலையில், கடந்த 2 ஆண்டுகளாக போதிய அளவு தண்ணீர் அணையில் இல்லாததால், பாசனத்துக்கு குறித்த காலத்தில் தண்ணீர் திறந்துவிடப்படவில்லை.

இந்த நிலையில், கடந்த சில வாரங்களாக குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 600 கன அடி வீதம் அணையிலிருந்து தண்ணீர் வெளியேற்றப்பட்டு வந்தது.

இது கடந்த சில நாள்களுக்கு முன்பு நொடிக்கு 800 கன அடியாக அதிகரிக்கப்பட்டது.

இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் அணையில் இருந்து நொடிக்கு 900 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. தற்போது அணையின் நீர்மட்டம்

15.93 அடியாகவும், நீர் இருப்பு 3.01 டிஎம்சியாகவும் உள்ளது. அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 85 கன அடியாக உள்ளது.

## வறட்சி நிவாரணத்தில் வெளிப்படைத் தன்மை அவசியம்

வறட்சி நிவாரணம் வழங்குவதில் வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும் என இந்திய விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு ஆலோசனைக் கூட்டம் திருச்செங்கோட்டில் சனிக்கிழமை நடைபெற்றது. தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் எஸ். ராமசாமி தலைமை வகித்தார்.

கூட்டமைப்பின் செயலர் வழக்குரைஞர் செ. நல்லசாமி, மாநில கள் இயக்க அமைப்பாளர்கள் பி.கே.ராமசாமி, இரா. முத்துரத்தினம், கதிரேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கீழ்பவானி விவசாயிகள் நலச் சங்கச் செயலர்கள் கோபிநாத், தங்கராசு ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:

கடந்த ஆண்டு ஜூன் மாதம் மேட்டூர் அணையில் 40 டிஎம்சி தண்ணீர் இருந்தது. இன்று 3.5 டிஎம்சி தண்ணீர் மட்டுமே உள்ளது. கடந்த ஆண்டு டெல்டா மாவட்டங்களில் நிலத்தடி நீரை வைத்து 2 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. ஆனால், இன்று குடிநீருக்கே தட்டுப்பாடு உள்ளது. அரசு குடிநீருக்கு தட்டுப்பாடு இல்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மத்திய அரசு காவிரி மேலாண்மை வாரியத்தை நிறுவி காவிரி நீர் நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டும். தமிழகத்தில் காற்றாலைகள் மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தை எடுத்துச் செல்லவோ, அண்டை மாநிலங்களில் உபரியாக உள்ள மின்சாரத்தை தமிழகத்திற்கு கொண்டு வரவோ மின் பாதை இல்லை. இதனால் தமிழகத்தின் முன்னேற்றம் பின்னுக்கு தள்ளப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் அடையாளம் பனை மரம். தமிழகத்தில் கள் இறக்குவதற்கும், பருகுவதற்கும் தடை இருக்கிற காரணத்தால் தோண்டப்படும் பனை மரங்களின் எண்ணிக்கை கூடிக் கொண்டே போகிறது. தமிழகத்தில் வறட்சி நீங்கிய பிறகு கள்

இறக்கும் போராட்டம் தீவிரப்படுத்தப்படும். கொங்கு மாவட்டங்கள் வழியாக கவிரி, பவானி, அமராவதி, நொய்யல், குடகனாறு, திருமணி முத்தாறு ஆகியவை ஓடுகின்றன. இவற்றில் ஓடும் நீரும் இல்லை. அள்ளுவதற்கு மணலும் இல்லை. இதனால் மணல் திருட்டும் இல்லை.

அரசின் தவறான இறக்குமதிக் கொள்கையால் தேங்காய்க்கு விலை இல்லை. இதனால் தென்னை விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். மழை மாநிலங்களான கர்நாடகம், கேரளம், ஆந்திரத்தில் உள்ள 13 ஆறுகள் வழியாக ஓடி அரபிக் கடலில் கலக்கும் நீரின் அளவு 2 ஆயிரம் டிஎம்சி ஆகும். தமிழகத்தின் ஓராண்டு மொத்த நீர் வளமே 833 டிஎம்சி தான். அரபிக் கடலில் கலக்கும் 200 டிஎம்சி நீரை நேத்ராவதி வடி நிலத்திலிருந்து ஹேமாவதிக்கு திருப்பினாலே காவிரிப் பிரச்னை காணாமல் போகும். கடலில் கலக்கும் நீர் மத்திய அரசுக்குச் சொந்தம் என்று சட்டம் இயற்றி தேவையான பகுதிகளுக்கு திருப்பினால் காவிரிப் பிரச்னை உள்ளிட்ட அனைத்து நதித் தகராறுகளும் காணாமல் போகும். இந்த நிலை ஏற்பட்டால் நாடு முழுவதும் கரும்பு பயிரிட்டு, எத்தனால் எரி பொருள் தயாரித்து பெட்ரோலிய இறக்குமதிக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

பாசனத்திற்கு வழியின்றி பாதிக்கப்பட்ட பயிர்களுக்கான நிவாரணத் தொகை நிர்ணயம் செய்வதிலும், வழங்குவதிலும் வெளிப்படைத் தன்மை இருக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேறின.

### தண்ணீர் திறக்க விவசாயிகள் கோரிக்கை

கோபியில் கொடிவேரி அணை பாசனதாரர்கள் சங்கக் கூட்டம் அதன் தலைவர் தங்கம் பழனிச்சாமி தலைமையில் சனிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு சங்கச் செயலாளர் ராஜ வெங்கடேஸ்வரன் முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக காலிங்கராயன் பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் பாபு கலந்துகொண்டு பேசினார். இதில், தமிழகத்தின் தென் மாவட்டங்களில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, பாபநாசம் உள்ளிட்ட பல்வேறு அணைகளில் தண்ணீர் நிரம்பி வருகிறது.

இதனால், மேற்கண்ட அணைகளிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட அரசு உத்தரவிட்டுள்ளது. தற்போது பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 46 அடியாக உள்ளது.

எனவே, பவானிசாகர் அணையிலிருந்து தடப்பள்ளி-அரக்கன்கோட்டை வாய்க்கால் பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட அரசு உத்தரவிட வேண்டும்.

கொடிவேரி அணை பாசனதாரர்கள் சங்கத் துணைத் தலைவர்கள் வழக்குரைஞர் தளபதி, பிரதாபன் மற்றும் தனசீலன், வெங்கடாசலபதி, சேகர் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## தமிழக முதல்வரின் மழைநீர் சேகரிப்புத் திட்டம் இந்தியாவின் முன்னோடித் திட்டம்

தமிழக முதல்வரின் மழைநீர் சேகரிப்புத் திட்டம் நிலத்தடி நீரை அதிகரிக்கச் செய்வதுடன், கடல் நீர் உள்புகுவதை தடுக்கக்கூடிய முன்னோடி திட்டமாகும் என கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் எஸ்.சுந்தரராஜ் தெரிவித்தார்.

பரமக்குடி நகராட்சி சார்பில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி ஆர்.எஸ்.அரசு மேல்நிலைப் பள்ளியில் சனிக்கிழமை துவங்கியது. இந்நிகழ்ச்சிக்கு நகர்மன்றத் தலைவர் கீர்த்திகாமுனியசாமி தலைமை வகித்தார். தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு தலைவர் ஜி.முனியசாமி, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் எம்.சுந்தரபாண்டியன், நகர்மன்ற துணைத் தலைவர் டி.என்.ஜெய்சங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகராட்சி பொறியாளர் ஜி.தங்கபாண்டி வரவேற்றார்.

அமைச்சர் எஸ்.சுந்தரராஜ் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வ பேரணியை துவக்கி வைத்துப் பேசியது: தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் மழைநீர் சேகரிப்புத் திட்டம் இந்தியாவுக்கு முன்னோடி திட்டமாகும். ஏனெனில் மழை பொய்த்து வறட்சி ஏற்படும் இதுபோன்ற காலங்களில் ஏற்கெனவே சேமிக்கப்பட்ட மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் மூலம் நிலத்தடி நீர் தேங்கி நிற்கும்.

அப்பகுதியில் உள்ள கிணறு மற்றும் ஆழ்குழாய் மூலம் நிலத்தடி நீரை எடுத்து பயன்படுத்தலாம். மேலும் வெள்ளப்பெருக்கு காலத்தில் மழைநீர் வீணாகாமல் மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் அமைத்து நிலத்தடியில் கொண்டு செல்வதால் வறட்சி ஏற்படாமல் பாதுகாப்பதுடன், வறட்சியால் கடல்நீர் உள்புகுவதையும் தடுக்க முடியும் முன்னோடி திட்டமாகும்.

மத்திய அரசின் தவறான கொள்கையால் தமிழகம் போன்ற பகுதியில் வறட்சியால் பாதிப்பும், உத்ரகாண்ட் போன்ற பகுதியில் வெள்ளப்பெருக்கால் பாதிப்பும் ஏற்பட்டு வருகிறது. இதனை தடுக்கும் விதமாகவே தமிழக முதல்வர் இந்திய நதிகளை இணைக்க வேண்டும் என வலியுறுத்தி வருகிறார். தமிழக முதல்வரின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்குமானால் இதுபோன்ற வெள்ளப்பெருக்கை தடுப்பதுடன், தமிழகம் போன்ற மாநிலங்களில் நிலவும் வறட்சியையும் போக்கி வேளாண்மை உள்பட பல்வேறு தொழில்துறைகளில் இந்தியா முன்னேறும் நாடாக மாறும் என்பது உறுதி.

இந்தியாவுக்கே முன்னோடி திட்டமான மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை தமிழ்நாட்டில் அனைத்து தரப்பு மக்களும் தங்களின் குடியிருப்பு உள்ளிட்ட கட்டடங்களில் ஏற்படுத்தி நிலத்தடி நீரை சேமிக்க வழிவகை செய்ய வேண்டும். இதற்காக நகராட்சி சார்பில் பள்ளி மாணவர்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், நகராட்சி பணியாளர்கள் கொண்ட விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டு வருகிறது என்றார்.

பேரணியில் பரமக்குடி பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் எம்.அஜ்மல்கான், செ.சந்தியாகு, கே.எஸ்.நாகராஜன் உள்பட பள்ளி மாணவ-மாணவிகள், மகளிர் குழுக்கள், நகராட்சி பணியாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## விருதுநகர் மாவட்டத்தில் ரூ. 85 கோடி பயிர் கடன் வழங்க இலக்கு நிர்ணயம்

விருதுநகர் மாவட்டத்தில் கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.85 கோடி விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்க இலக்கு நிர்ணயம் செய்துள்ளதாக இணைப்பதிவாளர் ஜி.குருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: விருதுநகர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு பயிர் கடன் வழங்க ரூ.85 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பயிர் செய்யப்படும் நிலத்தின் பேரில் மட்டுமே இக்கடன் வழங்கப்படும். இதற்காக 10(1)ன் கீழ் சிட்டா அடங்கல் அல்லது நகல் ஆகிய ஆவணங்கங்களை கொடுக்க வேண்டும். சாகுபடி செய்யப்படும் பரப்பளவு மற்றும் பயிருக்கு நிர்ணயம் செய்யப்பட்ட கடன் அளவு ஆகியவைகளின் அடிப்படையிலேயே கடன் வழங்கப்படுகிறது. அதேபோல், விவசாய கூட்டுப் பொறுப்புக் குழு உறுப்பினர்களுக்கு, குழு உறுப்பினர்களின் ஜாமீன் பேரில் பயிர் கடன் வழங்கப்படுகிறது.

தங்க நகை ஈட்டின் பேரில் பயிர் கடன் பெறும்போது பத்திரப் பதிவு அலுவலகத்தில் ஆவணம் எதுவும் பதிந்து கொடுக்க வேண்டியதில்லை. அதேபோல், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் விவசாயத்துக்கு கடன் பெற்று விவசாய சாகுபடி செய்து குறிப்பிட்ட நாளுக்குள் கடனை திரும்பச் செலுத்தினால் வட்டி எதுவும் கட்டத் தேவையில்லை. அசல் மட்டும் கட்டினால் போதுமானது ஆகும்.

எனவே அனைத்து விவசாயிகளும் அந்தந்த பகுதிகளில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களை அணுகி, சங்கம் கோருகிற ஆவணங்களை அளித்து தகுதியின் அடிப்படையில் பயிர்க் கடன் பெற்று பயனடையுமாறு கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ஜி.குருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகராட்சியில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுக் கூட்டம் நடைபெற்றது.

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகராட்சியில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுக் கூட்டம் நடைபெற்றது.

நீர் ஆதாரம் வெகுவாக குறைந்து வருவதாலும், மழை இல்லாத காரணத்தாலும் தமிழக அரசு இனிமேல் கட்டப்படும் அனைத்து வீடுகளிலும் கட்டாயம் மழைநீர் சேகரிப்பு அமைக்கப்படவேண்டும் என உத்தரவிட்டுள்ளது. இதை அமல்படுத்தும் விதமாக நகராட்சியில் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்ட கூட்டம் நடைபெற்றது. இதற்கு நகர்மன்றத் தலைவர் சுமித்ரா தலைமை வகித்தார். அனைத்து வார்டுகளிலும் உள்ள மக்களிடம் இதுகுறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

## விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

கொடைக்கானலில் பழப்பயிர்கள் அறுவடை பின்சார் தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கொடைக்கானல் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், மற்றும் கேரள தேசிய தோட்டக்கலை இயக்கம் ஆகியவை இணைந்து,

பழப்பயிர்களில் அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி முகாம் நடைபெற்றது.

முகாமுக்கு, தோட்டக்கலை துணை இயக்குநர் ராஜாங்கம் தலைமை வகித்து பேசுகையில், வியாபார ரீதியில் பழப்பயிர்கள் மதிப்பூட்டலின் முக்கியத்துவம் மற்றும் விவசாயிகள் குழுக்கள் அமைப்பு பற்றி எடுத்துரைத்தார். தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் இயக்குநர் ராஜாங்கம் பயிற்சியினை துவக்கி வைத்து பேசுகையில், மலைப் பகுதிக்கேற்ற பழப்பயிர்களில் அறுவடைக்கு பின் ஏற்படும் சேதம் சுமார் 20-சதவீதத்தினை குறைக்க நவீன தொழில்நுட்பங்களை கையாள்வதன் அவசியம் பற்றி விளக்கினார்.

முகாமில், கேரள தேசிய தோட்டக்கலை வேளாண்மை துணை இயக்குநர் எம். ஷாஜி பேசுகையில், பழப் பயிர்களான ஆப்பிள், பிளம்ஸ், பீச் மற்றும் பேரியில் அறுவடைக்குப் பின்னர் பின்பற்ற வேண்டிய தொழில்நுட்பங்கள் பற்றிய விழிப்புணர்வை விவசாய பெருமக்களிடம் எடுத்துரைத்தார்.

பழப்பயிர் சாகுபடி,பயிர் பாதுகாப்பு அறுவடைக்குப் பின் தொழில் நுட்பங்கள் மற்றும் மதிப்பூட்டுதல் பற்றி முனைவர்கள் செந்தமிழ்ச் செல்வி,சதீஷ்,

வெற்றிவேல் காளை,எழிலன்,பமிலா,முத்துச்செல்வி ஆகியேங்ர் எடுத்துரைத்தனர்.

50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**24.06.2013 A.M**

---

## இந்திய உணவு கழகத்திற்கு 1.50கோடி டன் உணவு தானியங்களை விற்க அனுமதி

புதுடில்லி:இந்திய உணவு கழகம், 1.50கோடி டன் உணவு தானியங்களை வெளிச் சந்தையில் விற்பனை செய்வதற்கு, பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

ஒப்புதல்:இதனை, மத்திய உணவு அமைச்சர்கே.வி.தாமஸ், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அவர்மேலும் கூறியதாவது:மத்திய அரசின் ஒப்புதலை அடுத்து, இந்திய உணவு கழகம், ஒருகோடி டன்கோதுமை மற்றும் 50 லட்சம் டன் அரிசியை, வெளிச் சந்தையில் விற்பனை செய்யும்.இதில், பஞ்சாப் மற்றும் அரியானா மாநிலங்களில் இருந்து, ஒரு குவிண்டால், 1,500 ரூபாய் வீதம், 85 லட்சம் டன்கோதுமை, மொத்த வியாபாரிகளுக்கு விற்கப்படும்.மேற்கண்ட விலையுடன், சரக்குபோக்குவரத்து செலவையும்சேர்த்து, 10 லட்சம் டன்கோதுமை, நாடு முழுவதும் உள்ள சில்லரை வியாபாரிகளுக்கு விற்பனை

செய்யப்படும். இதே விலையில், சில்லரை வியாபாரிகளுக்கு விற்பனை செய்வதற்காக, மாநில அரசுகளுக்கு, 4 லட்சம் டன்னும், கூட்டுறவு கடைகளுக்கு ஒரு லட்சம் டன்கோதுமையும் ஒதுக்கப்படும்.இதேபோன்று, மாநிலங் களுக்கு, 5 லட்சம் டன் அரிசி ஒதுக்கீடு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றுக்கு, ஒரு குவிண்டால் 1,875 ரூபாய்(சரக்குபோக்குவரத்து செலவினம் தனி) என, விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார். வெளிச் சந்தை விற்பனைக்காக ஒதுக்கப்பட்டு உள்ள, 1.05கோடி டன் உணவு தானியங்களுக்கான மொத்த மானியச்செலவினம், 5,491கோடி ரூபாயாகும். வெட்ட வெளி:மத்திய அரசின் இந்த நடவடிக்கையால், அரிசி,கோதுமை ஆகிய உணவு பொருட்களின் விலை, கட்டுக்குள் இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய உணவுக் கழகத்திடம், 7.70கோடி டன் உணவு தானியங்கள் கையிருப்பில் உள்ளன. இதில், 7.40கோடி டன் உணவு தானியங்களை பாதுகாப்பாக வைப்பதற்கே, கிடங்கு வசதி உள்ளது. எஞ்சியவை, வெட்ட வெளி கிடங்குகளில் வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## சொட்டுநீர் பாசன விழிப்புணர்வு முகாம்

தர்மபுரி: தோட்டக்கலை துறை சார்பில், சொட்டுநீர் பாசன விழிப்புணர்வு முகாம், தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. கலெக்டர் லில்லி, முகாமை துவக்கி வைத்து பேசியதாவது:தமிழ்நாடு அரசு வேளாண் உற்பத்தியை, இரண்டு மடங்காக்கி, அதன் மூலம், மூன்று மடங்கு வருமானத்தை, விவசாயிகள் பெறும் வகையில், திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. மாவட்டத்தில், மொத்தம் சாகுபடி செய்யப்படும், 1.5 லட்சம் ஹெக்டேரில், தோட்டக்கலை பயிர்களான பழங்கள், காய்கறிகள், மலர் பயிர்கள், பணப்பயிர்கள் போன்றவை, ஒவ்வொரு ஆண்டும், 70 ஆயிரம் முதல், 75 ஆயிரம் ஹெக்டேர் வரை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில், குறைந்த மழையளவு காரணமாக, வறட்சியான சூழ்நிலை நிலவியது. தற்போது, கொஞ்சம் மழை பெய்துள்ளது. விவசாயிகள், தங்களது சாகுபடியை இருக்கின்ற தண்ணீரை பயன்படுத்தி பயன்பெறும் வகையில், அரசு, சொட்டு நீர் பாசனத்திற்காக சிறு, குறு விவசாயிகளுக்கு, 100 சதவீத மானியத்தை அறிவித்துள்ளது.

இருக்கின்ற தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி, அதே நேரத்தில், கூடுதல் உற்பத்தியை பெறுகின்ற வகையில், நவீன தொழில்நுட்பங்களை, விவசாயிகள் பயன்படுத்த வேண்டும். குடிநீர் மட்டுமல்லாமல், விவசாயம் உள்ளிட்ட பிற பயன்பாட்டிற்கான தண்ணீரையும், வீணாக்காமல் பயன்படுத்த வேண்டும். தர்மபுரி மாவட்ட தோட்டக்கலை பயிர்கள் சாகுபடிக்கு ஏற்ற மாவட்டமாக திகழ்கிறது. இதற்கு, சொட்டுநீர் பாசனம், மிகவும் இன்றியமையாததாகும். இதற்காக, அரசு சிறு, குறு விவசாயிகளுக்கு, ஐந்து ஏக்கர் வரை சொட்டு நீர்பாசனம் அமைப்பதற்கு, 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு, 12.50 ஏக்கர் வரை, 75 சதவீத மானியமும் வழங்குகிறது. சொட்டுநீர் பாசனம் அமைப்பதற்கு, அரசு, 21 சொட்டுநீர் பாசனம் அமைக்கும் நிறுவனங்களை அங்கீகரித்துள்ளது. விவசாயிகள், தங்கள் விருப்பத்திற்கேற்ப, சொட்டுநீர்பாசனம் அமைப்பதற்கு, நிறுவனங்களை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

கடந்த ஆண்டில் மட்டும், 3,504 விவசாயிகள் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க விண்ணப்பம் அளித்ததின் பேரில், ஆணை வழங்கப்பட்டு சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கப்பட்டு மானியம் விடுவிக்கப்பட்டு வருகிறது.

நடப்பாண்டில், சொட்டு நீர்ப்பாசனம் வேளாண் துறை மூலம் அமைப்பதற்கு, ஆயிரத்து, 275 ஹெக்டரும், தோட்டக்கலை துறை சார்பில், 560 ஹெக்டேரும் இலக்கு பெறப்பட்டுள்ளது.இத்திட்டத்தினை, விவசாயிகள் பயன்படுத்தி, தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி, பயிர்களில் அதிக மகசூல் பெற வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.வேளாண் இணை இயக்குனர் மனோகரன், கலெக்டர் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) வெங்கடேசன், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் பச்சியப்பன், வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் தமிழ்செல்வன் ஆகியோர் பேசினர். முன்னதாக, தோட்டக்கலைதுறை துணை இயக்குனர் (பொ) பாஸ்கர் வரவேற்றார்.உதவி இயக்குனர் முகுந்தன் நன்றி கூறினார்.

## எட்டாத உயரத்தில் வாழை விலை சுபமுகூர்த்தத்தால் மக்கள் தவிப்பு

வேலாயுதம்பாளையம்: புகளூர் மற்றும் சுற்று வட்டார பகுதியில் வாழைத்தார் வரத்து குறைவால், விலை உயர்ந்துள்ளது. திருமண சீசன் என்பதால் மக்கள் தவித்து வருகினறனர். கரூர் மாவட்டம் புகளூர், செம்படாபாளையம், தோட்டக்குறிச்சி, தளவாபாளையம், கிழக்குத்தவிட்டுப்பாளையம், நொய்யல், மரவாபாளையம், புங்கோடை, முத்தனூர், நடையனூர், சேமங்கி, நத்தமேடு, திருக்காடுதுறை, கட்டிபாளையம், பாலத்துறை உட்பட பல்வேறு பகுதிகளில் வாழை, 5,000 ஏக்கருக்கு மேல் பயிரிடப்பட்டுள்ளது. இதில், பூவன், வாழைத்தார், கற்பூரவள்ளி, பச்சை நாடன், மொந்தன் உள்ளிட்ட ரகம் சாகுபடி செய்யப்படுகிறது.

இப்பகுதியில் அறுவடை செய்யப்படும் வாழைத்தார், கரூர் மட்டுமல்லாமல், நாமக்கல், சேலம், கோவை, நீலகிரி ஈரோடு உள்ளிட்ட பகுதிகளுக்கும், கேரளா, கர்நாடகா, ஆந்திரா ஆகிய வெளி மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகிறது.

வறட்சி காரணமாக தண்ணீர் இல்லாமல் வாழை காய்துவிட்டதாலும், சீஸன் மாறுபாட்டின் காரணமாகவும் வாழைத்தார் வரத்து குறைவாக இருக்கிறது.

இதனால் ஒவ்வொரு ரகத்துக்கும், 100 ரூபாய் முதல், 250 ரூபாய் வரை, தரத்திற்கு ஏற்ப விலை கிடு கிடுவென உயர்ந்துள்ளது. பூவன், 250 ரூபாயிலிருந்து, 450 ரூபாய்க்கும், ரஸ்தாளி, 200லிருந்து, 300 ரூபாய்க்கும், கற்பூரவள்ளி 150லிருந்து, 300 ரூபாய்க்கும், பச்சநாடன், 100லிருந்து, 300 ரூபாய் வரை, அதிகரித்துள்ளது. ஒரு மொந்தன் வாழைக்காய் விலை, மூன்றிலிருந்து ஏழு ரூபாயாக உயர்ந்துள்ளது.

""வாழை மரங்கள் தண்ணீர் இல்லாமல் காய்ந்து சருகாகி வருவதாலும் ஆவனி மாதங்களில் திருமணம் உள்ளிட்ட சுப விஷேசங்கள் அதிகளவில் நடக்க உள்ளதால், வாழைத்தார் விலை மேலும் உயர வாய்ப்புண்டு' என வாழைத்தார் வியாபாரிகள் தெரிவித்தனர்.

## 700 ஏக்கர் தீவன சோளம் பயிரிட இலக்கு நிர்ணயம்: கலெக்டர் தகவல்

கரூர்: கரூர் மாவட்டம் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், தீவன சோளம் பயிரிடப்பட்டு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மானிய விலையில் வழங்கும் நிகழ்ச்சி, கரூர் அருகே வீரராக்கியத்தில் நடந்தது. இதில் கலெக்டர் ஜெயந்தி தலைமைவகித்து பேசியதாவது:

இத்திட்டத்தில், முதற்கட்டமாக தீவனச் சோள விதை தேசிய விதை கழகம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு விதை விநியோகம் செய்யப்பட்டது. சாகுபடி செலவில் முதற்கட்டமாக விதை, உழவுச் செய்தல், ரசாயன உரமிடுதல், நீர் பாய்ச்சுதல் ஆகிய பணிகளுக்கு மானியமாக, 3,040 ரூபாய் அளிக்கப்படுகிறது. தற்போது, சோளம் விதைக்க ப்பட்ட, 60 முதல் 70 நாள் அறுவடை செய்யும் நிலையில், சந் தை நிலவரத்துக்கு இணையாக நிர்ணயிக்க வேண்டும் என்ற விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். உயர்நிலை குழுக் கூட்டத்தில் பசுந்தீவனம் கிலோ நான்கு ரூபாய், உலர் தீவனம் கிலோ 20 ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டு, ஆவின் மூலம் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 700 ஏக்கரில் தீவனச் சோளம் வளர்க்க, 46.5 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
இவ்வாறு அவர் பேசினார். திருச்சி மாவட்ட ஆவின் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத் துணைத் தலைவர் பாஸ்கர், மண்டல இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத் துறை) சக்திவேல், உதவி இயக்குநர் குழந்தைசாமி உள்பட பலர் பங்கேற்றனர்.

## மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி

மண்ணச்சநல்லூர்: சமயபுரம் கண்ணனூர் டவுன் பஞ்சாயத்து சார்பில் மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி சமயபுரத்தில் நடந்தது.டவுன் பஞ்சாயத்து சேர்மன் அம்சவள்ளி தலைமை வகித்தார். நிர்வாக அலுவலர் கணேசன் முன்னிலை வகித்தார்.
சமயபுரம் அரசு உயர்நிலைப்பள்ளியைச் சேர்ந்த 200 மாணவர்கள், டவுன் பஞ்., கவுன்சிலர்கள் பிரவீண்குமார், சித்ராதேவி, பாலகிருஷ்ணன், சரவணன், இளநிலை உதவியாளர்கள் சாகுல் அமீது, சதீஷ்கிருஷ்ணன், சுகாதார ஆய்வாளர் சிவக்குமார், பணியாளர் கோபாலகிருஷ்ணன், சந்திரசேகரன், ஆசிரியர்கள் செல்வம், சோமசுந்தரம் உள்ளிட்டோர் பேரணியில் பங்கேற்றனர்.
பேரணியில் மழைநீர் சேகரிப்பை வலியுறுத்தி வீடுகளுக்கு துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டது.

## ஆடு, கோழி இறைச்சி விலை உயர்வு

ஈரோடு: ஆடு, கோழி இறைச்சியின் விலை நேற்றும் குறையாததால், மீன் இறைச்சியை வாங்க பொதுமக்கள் குவிந்தனர்.தமிழகம் முழுவதும் பருவமழை பொய்த்ததால், விவசாய

நிலங்கள் வறண்டு, காய்கறி வரத்து குறைந்துள்ளது. கால்நடைக்கான தீவன பற்றாக்குறையால், தீவனங்களின் விலையும், சோளத்தட்டின் விலையும் உயர்ந்தது. அத்துடன், கறிக்கோழிக்கான தீவனம் விலையும் உயர்ந்தது.கடந்த சில வாரமாக, தமிழகம் முழுவதும் கோழி, ஆட்டு இறைச்சியின் விலை உயர்ந்தது. நாட்டுக்கோழி கிலோ, 370க்கும், பிராய்லர், 180க்கும், ஆட்டுக்கறி, 400க்கும் விற்பனையானதால், மக்கள் அதிர்ச்சி அடைந்தனர்.இந்த வாரமும் அதே விலையில் ஆடு, கோழி இறைச்சி விற்பனையானதால், மீன் இறைச்சிக்கு மக்கள் மாறினர். நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால், ஈரோடு ஆர்.கே.வி., சாலை, ஸ்டோனி பிரிட்ஜ் பகுதியில் உள்ள மீன் மார்க்கெட்டில் பொதுமக்கள் குவிந்தனர்.

இதுகுறித்து ஆர்.கே.வி., சாலை மீன் மார்க்கெட் வியாபாரி ரமேஷ் கூறியதாவது: ஈரோட்டில் கோழி, ஆட்டின் இறைச்சி விலை உயர்ந்துள்ளதால், இன்று (நேற்று) மீன் இறைச்சியை வாங்க பொதுமக்கள் ஆர்வம் காட்டினர். இன்று (நேற்று), கட்லா, ரோகு ரக மீன்கள் கிலோ, 120க்கும், நெய்மீன், நூறு ரூபாய்க்கும், நண்டு, 250க்கும், மத்தி, 50க்கும், ஜிலேபி, 60க்கும், பெரிய ஜிலேபி, 80க்கும், ராட்டு, 300க்கும், அயிலை, 170க்கும், சங்கரா, 170க்கும் விற்பனையானது.ஆடு, கோழி இறைச்சியோடு ஒப்பிடுகையில், மீன்களின் விலை குறைவாக இருப்பதால், வழக்கத்தை விட மீன் மார்க்கெட்டில் பொதுமக்களின் கூட்டம் அதிகமாக உள்ளது. தீவன பற்றாக்குறை நிலவுவதால், வரும் வாரங்களில் ஆடு, கோழி இறைச்சியின் விலை குறையாது என கூறப்படுகிறது. எனவே, அடுத்தவாரம், இதைவிட அதிக மக்கள் கூட்டம் இருக்கும், என்றார்.

## காய்த்து குலுங்கும் நாவற்பழம்

ஈரோடு: ஈரோடு முத்துக்கவுண்டன்பாளையத்தில் காய்த்துக்குலுங்கும் நாவற்பழம், கிலோ, 100 ரூபாய்க்கு விற்பனையாகிறது. ஈரோடு மாவட்டத்தில் எந்த ஆண்டுக்கும் இல்லாத அளவுக்கு, நடப்பாண்டு வறட்சி ஏற்பட்டுள்ளது. வறட்சியால், பெரும்பாலான விளைநிலங்கள் வறண்ட பாலையாய் காட்சியளிக்கிறது. வறுமையால், விளைநிலங்களை, கூறுபோட்டு விவசாயிகள் விற்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர். ஈரோடு அடுத்த முத்துக்கவுண்டன்பாளையத்தில் வறட்சியிலும், நாவற்பழ மரங்கள் காய்த்து

குலுங்குவதால், விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர். இதுகுறித்து நாவற்பழ மரங்கள் வளர்க்கும் விவசாயி சந்திரகுமார் கூறியதாவது:

கடந்த, 20 ஆண்டுக்கு முன், சேலம் மாவட்டம் கருமந்துறை தோட்டக்கலைத்துறையில், ஒரு கன்று, 20 முதல், 30 ரூபாய் வரை நாவற்பழ மரங்களை வாங்கி வளர்த்தேன். தற்போது ஐந்து ஏக்கரில், கொய்யா, நெல்லி, நாவற்பழம், மாமரங்களை வளர்த்து வருகிறேன். ஈரோடு மாவட்டத்தில் எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு, இந்த ஆண்டு கடும் வறட்சி நிலவியதால், நீரின்றி மரங்கள் காய்ந்தது.

வறட்சியிலும் நாவற்பழங்கள் காய்த்து குலுங்குகிறது. எனினும், பழங்கள் அனைத்தும் வழக்கத்தை விட, சிறிதாக காணப்படுகிறது. மரங்களுக்கு மருந்தை அடிக்காமல், இயற்கை உரங்களை மட்டுமே பயன்படுத்தி வருவதால், நாவற்பழங்கள் சுவை மிகுந்து உள்ளது.எங்களிடம் கிலோ, நூறு ரூபாய்க்கு நாவற்பழங்கள் கிடைக்கிறது. எங்களிடம் வாங்கி சென்று, ஈரோடு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில், கிலோ, 300 முதல், 350 ரூபாய் வரை வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனர்.சர்க்கரை நோயை கட்டுப்படுத்துவதால் நாவற்பழங்களை, சிறியவர்கள் முதல், பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பி சாப்பிடுவார்கள், என்றார்.

## தாளவாடியில் உழவர் மன்ற துவக்க விழா

ஈரோடு: ஈரோடு அடுத்த தாளவாடியில், எட்டு கிராமங்களை சேர்ந்த, விவசாயிகள் பங்கேற்ற, உழவர் மன்ற துவக்க விழா நடந்தது.

நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் சந்தானம் தலைமை வகித்தார். முன்னோடி வங்கி மேலாளர் வெங்கட்ராமன், வட்டார வளர்ச்சிஅதிகாரி ரவி, தாளவாடி பஞ்சாயத்து தலைவர் நஞ்சுண்டநாயக்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் கருணாமூர்த்தி, தோட்டக்கலைத்துறை மணிகண்டன், கார்ப்பரேசன் வங்கி கிளை மேலாளர் செந்தில், கனரா வங்கி கிளை மேலாளர் சகாயராஜ், கால்நடைத்துறை மருத்துவர் அழகேசன் ஆகியோர் பங்கேற்று, விவசாயிகளுக்கான சலுகைகள், வங்கி கடன், விவசாய பொருட்களை உற்பத்தி செய்யும் முறைகள் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

தாளவாடி, பயனாபுரம், தளக்கள்ளி, எட்டவாடி, ஓசூர், கரளவாடி, அருள்வாடி, ஹாசனூர் கிராமங்களை சேர்ந்த, நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் யேசுதாஸ், பெலவேந்திரன் உள்பட பலர் பங்கேற்றனர்.

## வறட்சியால் மல்பெரி பாதிப்பு: பட்டுக்கூடு விலை உயர்வு

கோபிசெட்டிபாளையம்: தண்ணீரின்றி மல்பெரி பாதிக்கப்பட்டதால், 50 சதவீதம் வரை கூடு உற்பத்தி குறைந்துள்ளது. பட்டு கூடு உற்பத்தி குறைவால், கிலோவுக்கு, 25 முதல், 50 ரூபாய் வரை பட்டுக்கூட்டின் விலை உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். ஈரோடு மாவட்டத்தில், கோபி, கவுந்தப்பாடி, சத்தியமங்கலம், அந்தியூர், பவானி, பெருந்துறை உள்ளிட்ட பகுதிகளில், 3,000க்கும் மேற்பட்ட விவசாயிகள், 4,500 ஏக்கரில் மல்பெரி பயிரிட்டும், பட்டு கூடு வளர்ப்பிலும் ஈடுபட்டு வருகின்றனர். கோபி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில், 1,500 ஏக்கரில் மல்பெரி பயிரிடப்பட்டு, பட்டு கூடு உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்த இரு ஆண்டாக பருவமழை பொய்த்ததால், பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. நிலத்தடி நீர்மட்டம் பாதிக்கப்பட்டது. வெயில் காரணமாக, பட்டு கூடு உற்பத்தி சீரான முறையில் காணப்பட்டது. மல்பெரி இலை உற்பத்தி செய்ய போதிய அளவு தண்ணீர் இல்லாததால், பல இடங்களில் செடிகள் காய்ந்தது. எனவே, பட்டு கூடு உற்பத்தி வெகுவாக குறைந்து, கிலோவுக்கு, 20 முதல், 50 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. பட்டு கூடு மார்க்கெட்டில் மஞ்சள் கூடுக்கு, 340 முதல், 560 ரூபாய் வரையும், வெள்ளை கூடு, 360 முதல், 402 ரூபாய் வரையும் விற்கப்படுகிறது. வெள்ளை மற்றும் மஞ்சள் கூடுகளுக்கு, அதிக விலை கிடைத்து வரும் நிலையில், மல்பெரி செடி இல்லாததால் பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்ய முடியாமல், உற்பத்தியாளர்கள் திண்டாடி வருகின்றனர். எனினும், பட்டு கூடு விலை உயர்வால், பட்டு உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

பட்டு வளர்ப்பு துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் பட்டு கூடுகள், தர்மபுரி, கர்நாடகா ராம்நகர், கோவை ஆகிய இடங்களில் உள்ள பட்டு கூடு மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுகிறது. தினசரி, 50 ஆயிரம் கிலோ வரை, பட்டு கூடு வரத்தாகும். வறட்சியால், மல்பெரி இலை உற்பத்தி குறைந்தது. பட்டு கூடு

உற்பத்தி, 50 சதவீதம் வரை வெகுவாக குறைந்து, 25 ஆயிரம் கிலோ மட்டுமே வரத்தாகிறது. இந்நிலையில், பட்டு கூடு விலை சராசரியாக மஞ்சள், 360 ரூபாய்க்கும், வெள்ளை பட்டு கூடு, 380 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. இவ்விலை, விவசாயிகளுக்கு கட்டுபடியான விலையாக உள்ளது. கடுமையான வறட்சியால், மல்பெரி இலை உற்பத்தி செய்ய முடியாததால், பட்டு கூடு உற்பத்தி குறைந்தது. உற்பத்தி குறைவால், கிலோவுக்கு, 25 ரூபாய் முதல், 50 ரூபாய் வரை அதிகரித்துள்ளது, என்றார்.

## கடும் வறட்சியால் தென்னை துடப்பம் விலை அதிகரிப்பு

கிருஷ்ணகிரி: கடும் வறட்சி மற்றும் நோய் தாக்குதல் காரணமாக தென்னை ஓலைகள் பாதிக்கப்பட்டுள்ளதால், துடப்பம் உற்பத்தி குறைந்து விலை அதிகரித்துள்ளது.
தமிழகத்தில் ஈரோடு, கோவை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிக அளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில் குறிப்பாக தென்பெண்ணை ஆற்று படுகை பகுதிகளான, பெரியமுத்தூர், காவேரிப்பட்டணம், நெடுங்கல், அகரம், அரசம்பட்டி சுற்றுவட்டார பகுதிகள் உள்ளிட்ட பல பகுதிகளில், 3 லட்சத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளது.
தென்னை துடப்பம் உற்பத்தி செய்வது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குடிசை தொழிலாக உள்ளது. துடப்பம் உற்பத்தி செய்பவர்ளிடம் இருந்து அந்தந்த பகுதியில் உள்ள சிறு வியாபாரிகள் துடப்பத்தை வாங்கி கிருஷ்ணகிரி மற்றும் காவேரிப்பட்டணம் பகுதியில் உள்ள மொத்த வியாபாரிகளுக்கு விற்பனை செய்கின்றனர்.
இதனை தரம்பிரிக்கும் மொத்த வியாபாரிகள் டெல்லி மற்றும் பஞ்சாப் உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கு,தென்னை துடப்பத்தை விற்பனைக்கு அனுப்பி வைக்கின்றனர்.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதால் அதிக அளவில் தென்னை மரங்கள் காய்ந்துவிட்டது. மேலும், ஈரியோஃபைட் நோய் தாக்குதல் காரணமாக தென்னை ஓலைகள் பாதிக்கப்பட்டுள்ளது.
நோய் தாக்கிய தென்னை ஓலைகளில் உள்ள குச்சிகளும் பாதிக்கப்பட்டுள்ளதால் அதனை துடப்பம் செய்ய பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. இதன் காரணமாக மாவட்டத்தில் துடப்பம் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால் துடப்பத்தின் விலையும் உயர்ந்துள்ளது.
இது குறித்து கிருஷ்ணகிரி அடுத்த திருமலை நகரை சேர்ந்த துடப்பம் வியாபாரி ராமன் கூறியது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தென்னை மரங்களில் இருந்து கீழே விழும் ஓலைகளில் இருந்து கடந்த காலங்களில் அதிக அளவு துடப்பம் உற்பத்தி செய்யப்பட்டது.
ஒரு கிலோ குச்சிகளை கொண்ட துடப்பம், 2 ரூபாயுக்கு வாங்கி விற்பனை செய்யப்பட்டது. தற்போது மாவட்டத்தில் தென்னை மரங்களில் நோய் தாக்குதல் மற்றும் வறட்சி கராணமாக மரங்களை வெட்டி வருவதல் போன்ற காரணங்களால் துடப்பம் உற்பத்தி பாதிக்கப்பட்டது. கடந்த, ஐந்து ஆண்டுகளுக்கு முன் மாதம், 10 லோடு துடப்பம், வெளி மாநிலங்களுக்கு அனுப்பி வைத்தோம். தற்போது மாதத்திற்கு, மூன்று லோடு துடப்பம் மட்டுமே அனுப்பப்படுகிறது. உற்பத்தி குறைவால் துடப்பத்தின் விலையும் உயர்ந்துள்ளது. தற்போது, ஒரு கிலோ குச்சி கொண்ட துடப்பம், எட்டு ரூபாயுக்கு சில்லரை வியாபாரிகள் வாங்கி மொத்த வியாபாரிகளுக்கு, 10 ரூபாயுக்கு கொடுக்கின்றனர். பிளாஸ்டிக் துடப்பங்கள் பயன்பாட்டுக்கு வந்திருந்தாலும் வெளி மாநிலங்களில் ரோடுகளை சுத்தம் செய்தல் மற்றும் பல்வேறு தேவைக்கும் தென்னங் குச்சிகளால் ஆன துடப்பத்தை அதிகம் பயன்படுத்தி வருதால்,தென்னை துடப்பத்திற்கு நல்ல கிராக்கி உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

## கெலவரப்பள்ளி அணைக்கு நீர் வரத்து படிப்படியாக குறைவு

ஓசூர்; கர்நாடகாவில் மழை குறைந்ததால், ஓசூர் கெலவரப்பள்ளி அணைக்கு நீர் வரத்து குறைந்தது.
கர்நாடகாவில் கடந்த மூன்று நாளுக்கு முன் பெய்த கனமழையால் ஓசூர் கெலவரப்பள்ளி அணைக்கு நீர் வரத்து அதிகரித்து. அதனால், அணையில் இருந்து கிருஷ்ணகிரி கே.ஆர்.பி., அணைக்கு தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, 18 கிராமங்களில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. தற்போது கர்நாடகாவில் பருவமழை குறைந்துள்ளதால், கெலவரப்பள்ளி அணைக்கு நீர் வரத்து குறைந்துள்ளது.
தற்போது அணைக்கு, 250 கன அடி தண்ணீர் மட்டுமே வந்து கொண்டிருக்கிறது. இதனால், அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடுவது படிபடியாக குறைக்கப்பட்டு வருகிறது. நேற்று அணையில் இருந்து கிருஷ்ணகிரி கே.ஆர்.பி., அணைக்கு, 400 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறியதாவது:
கர்நாடகாவில் அவ்வப்போது கன மழை பெய்கிறது. அதனால், அணைக்கு நீர் வரத்து

திடீரென்று அதிகரித்து அணையில் இருந்து தண்ணீர் கூடுதலாக திறந்து விடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதனால், கெலவரப்பள்ளி அணை கிராமங்களில் பருவமழை முடியும் வரை, ஆற்றை பாதுகாப்பாக கடந்து செல்ல வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது, என்றார்.

## தனியார் பால் விலை உயர்வு ஆவின் பாலுக்கு மக்கள் ஆர்வம்

திருப்புத்தூர்:திருப்புத்தூரில் தனியார் பால் விலை அதிகரிப்பால், சில்லறை விற்பனையில்,ஆவின் பால் பாக்கெட்களை ஆர்வத்துடன் மக்கள் வாங்க துவங்கியுள்ளனர். அண்மையில் தனியார் பால் உற்பத்தி நிறுவனங்கள் விலையை அதிகரித்தன. லிட்டருக்கு ரூ. 1முதல் 2 வரை கூடியது. தீவன விலை உயர்வு, பாக்கெட்டிற்கான மூலப்பொருள் விலை உயர்வால் விலையும் உயர்த்தப்பட்டது. சில்லறை விற்பனை கடைகளில், தனியார் பால் அரை லிட்டருக்கு ரூ.18 முதல் 20 வரையிலும் விற்கப்படுகிறது.ஆவின் பால் அரை லிட்டருக்கு ரூ.17க்கு மட்டுமே விற்கப்படுகிறது. நுகர்வோர் ஆவின் பாலை வாங்குவதில் ஆர்வம் காட்டுவதால் விற்பனை அதிகரித்துள்ளது என, ஆவின் சில்லறை விற்பனையாளர்கள் கூறுகின்றனர்.

## வேளாண் கல்லூரி மாணவர்களுக்கு இயற்கை வேளாண் தொழில் பயிற்சி

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி அருகே, ஆதிரெங்கம் கிரியேட் இயற்கை வேளாண்மை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் வேளாண் கல்லூரி மாணவர்களுக்கு பாரம்பரிய, நெல்சாகுபடி, இயற்கை வேளாண் தொழில்நுட்பம் குறித்த பயிலரங்கம் நடந்தது. இதில், வேளாண்மை வல்லுனர் கரிகாலன் தலைமை வகித்து நடத்தி பேசினார். கிரியேட் விதை வங்கி ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் வரவேற்றார். திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் வேளாண் பட்டப்படிப்பு (பி.எஸ்.சி., அக்ரி) இறுதியாண்டு மாணவர்கள் சரவணன் தலைமையில், நாமக்கல், சிவகங்கை உள்பட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த மாணவர்கள் பங்கேற்றனர். இதில், கிரியேட் பயிற்சி இயக்குனர் ஜெயராமன் பங்கேற்று பேசியதாவது: நமது முன்னோர், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாரம்பரிய நெல்ரகங்களை போற்றி பாதுகாத்தனர். கடந்த 1962ம் ஆண்டுக்கு பின், சிறிது, சிறிதாக பாரம்பரிய நெல் சாகுபடியிலிருந்து விவசாயிகள் விலகி செல்ல வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டனர். இதனால், ஒவ்வொரு முறையும் விதைகளை பணம் கொடுத்து,

விலைக்கு வாங்கும் நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டது. செலவும் அதிகரித்தது. நெல்லுக்கு உரிய விலையும் கிடைக்கவில்லை. இதனால், பயிர் சாகுபடி என்பது நாளுக்குநாள் குறைந்து கொண்டே வருகிறது. தற்போது விளைநிலங்கள், வீட்டுமனைகளாக மாறி வருகின்றன.
விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கவும், நுகர்வோருக்கு நஞ்சில்லா உணவு கிடைக்க வேண்டும் என்னும் நோக்கத்தில், நமது நெல்லை காப்போம் என்னும் குறிக்கோளுடன் தமிழகத்தில் தங்களின் வீட்டு தேவைக்காக, பாரம்பரிய நெல் சாகுபடி செய்து வரும் விவசாயிகளை அடையாளம் கண்டு, இவர்களிடமிருந்து 63 ரகங்கள் பெறப்பட்டுள்ளன. இதில், 60 நாள் முதல் 180 நாள் வயதுடைய நெல் ரகங்களை ஆராய்ந்து, வெள்ளம், புயல், வறட்சி உள்பட சீற்றங்களை தாண்டி மகசூல் தரக்கூடிய பாரம்பரிய நெல் ரகங்களை கண்டறிந்து, அவற்றை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறோம். இவ்வாறு, அவர் பேசினார். நீலகிரி மாவட்ட மாணவர் பிரசாந்த் பேசுகையில், ""பாரம்பரிய நெல் ரகங்களை நமது முன்னோர் சார்பில், மீண்டும் பயன்பாட்டுக்கு கொண்டு வரவேண்டிய சூழல் தற்போது நிலவுவதை பயிற்சியில் அறிந்தேன். இத்தகைய நெல் ரகத்துக்கு சத்தான உரங்களும், பூச்சி மருந்துகளும் தேவையில்லை எனவும் தெரியவந்தது. ஒவ்வொரு பாரம்பரிய நெல்லும் மருத்துவ குணம் கொண்டதாக இருப்பது ஆச்சரியமளித்தது. இத்தகைய அனுபவத்தை அறிக்கையாக கல்லூரியில் சமர்ப்பித்து, பாரம்பரிய நெல் ரகத்தில் அதிக மகசூல் தொழில்நுட்பத்தை கண்டறிந்து, விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியம்," என்றார். ஏற்பாட்டை பயிற்சி ஒருங்கிணைப்பாளர் ராஜசேகரன் செய்திருந்தார். நாமக்கல் மாணவர் வேணுபிரசாந்த் நன்றி கூறினார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**24.06.2013 A.M**

## நீர்ப்பிடிப்பு பகுதியில் சாரல் மழை நீடிப்பு பாபநாசம் அணை 100 அடியை நெருங்கியது



நெல்லை : மேற்கு தொடர்ச்சி மலை அணை பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் சாரல் மழையால் பாபநாசம் அணை இன்னும் இரு தினங்களுக்குள் சதத்தை நெருங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நெல்லை மாவட்டத்தில் கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்பட்டு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. கார், பிசானம் ஆகிய இரு சாகுபடிகளுமே கடந்த ஆண்டு பொய்த்து போனது.

இந்நிலையில் இவ்வாண்டு வழக்கத்திற்கு மாறாக சாரல் மழை நெல்லை மாவட்டத்தில் வெளுத்து வாங்கி வருகிறது. மாவட்டம் முழுவதுமே வானம் மூடாப்பு போட்ட நிலையில் காணப்படுவதோடு, எப்போதும் மழைக்கான அறிகுறிகள் நிலவுகின்றன. நீர்ப்பிடிப்பு பகுதியில் சாரல் மழை காரணமாக அணைகளில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

நேற்றைய நிலவரப்படி அடவிநயினார் அணையில் அதிகபட்சமாக 20 மி.மீ மழை பதிவாகியுள்ளது. குண்டாறு அணையில் 19.2 மி.மீ, கருப்பா நதி அணையில் 6 மி.மீ மழை பதிவாகியுள்ளது. மற்ற அணைப்பகுதியில் மழையளவு விவரம்: பாபநாசம் அணை 1 மி.மீ,

சேர்வலாறு அணை 4 மி.மீ, மணிமுத்தாறு அணை 5.2 மி.மீ, கடனா நதி 5 மி.மீ, ராமநதி 4மி.மீ. இதுதவிர அம்பையில் 16.2 மி.மீ, சேரன்மகாதேவியில் 6 மிமீ மழை பதிவாகியுள்ளது.

நேற்று காலை நிலவரப்படி 144 அடி கொள்ளளவு கொண்ட பாபநாசம் அணையின் நீர்மட்டம் 97 அடியாக உயர்ந்தது. அணைக்கு வினாடிக்கு 3,083.22 கன அடிநீர் வருகிறது. அணையில் இருந்து 1,500 கன அடிநீர் வெளியேற்றப்படுகிறது. பாபநாசம் அணை இன்று அல்லது நாளை சதத்தை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 109 அடியில் இருந்து நேற்று 3 அடி கூடி 112.20 அடியாக உயர்ந்துள்ளது. மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 70.43 அடியாக உள்ளது. இந்த அணைக்கு 115 கன அடி நீர் வருகிறது. 275 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

கடனாநதி அணையில் நீர்மட்டம் 72.50 அடியாக உயர்ந்துள்ளது. அணைக்கு விநாடிக்கு 321 கன அடி தண்ணீர் வருகிறது. 84 அடி கொள்ளளவுடைய ராமநதி அணைய¤ல் 80 அடியாக இருந்த நீர்மட்டம் மேலும் 2 அடி உயர்ந்து நேற்று 82 அடியானது. அணைக்கு விநாடிக்கு 141 கன அடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து விநாடிக்கு 73 கன அடி நீர் திறக்கப்படுகிறது. ராமநதி அணை இன்று நிரம்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

36.10 அடி கொள்ளளவு கொண்ட குண்டாறு அணை, சாரல்மழை காரணமாக ஏற்கனவே நிரம்பி வழிகிறது. அணைக்கு விநாடிக்கு 7 கன அடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து 7 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. பிற அணைகளின் நீர்மட்டம் விவரம் : அடவிநயினார் அணை: 77.50 அடி, கருப்பாநதி 39.17 அடி, நம்பியாறு: 11.35, கொடுமுடியாறு 35 அடியாக உள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

24.06.2013 A.M

## வறட்சி நிவாரண நிதியை பாரபட்சம் இன்றி அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கிட வேண்டும் காங்கிரஸ் கட்சி கூட்டத்தில் கோரிக்கை

பெரம்பலூர்,

தமிழக அரசு வறட்சி நிவாரண நிதியை பார பட்சம் இன்றி அனைத்து விவசாயி களுக்கும் வழங்கிட காங்கிரஸ் கட்சி மாவட்ட கூட்டத்தில் அரசுக்கு வலியுறுத்தப் பட்டது.

காங்கிரஸ் கமிட்டி கூட்டம்

பெரம்பலூரில் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் அன்னமங்கலம் ஆர்தர் ஹெல்லர் தலைமை தாங்கி னார். மாவட்ட நிர்வாகி பி.எஸ். பரமசிவம்முன்னிலை வகித்தார்,

கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்¢மானங்கள் வரு மாறு:-

வறட்சி நிவாரணம்

மத்திய மந்திரி ப.சிதம்பரத்திற்கு காங்கிரஸ் கமிட்டி சிறப்பு பொறுப்பு வழங்கியமைக்கும், சுதர்சன நாச்சியப்பனுக்கு மத்திய மந்திரி பதவியும், திருநாவுக் கரசர், செல்லக்குமார், ஜெயக் குமார் மற்றும் மாணிக்தாகூர் ஆகியோருக்கு தேசிய செயலா ளர் பதவி வழங்கிய மைக்கும் அகில இந்திய தலைவர் சோனியாகாந்தி, ராகுல்காந்தி, பிரதமர் மன்மோகன்சிங் ஆகியோருக்கு இக்கூட்டம் நன்றி தெரிவிக்கிறது. தமிழக அரசு வழங்கும் வறட்சி நிவாரண நிதியை பாரபட்சம் இன்றி அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கிட வேண்டும்.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வங்கிகளிலும் விவசாயத்திற்கு உரிய கிசான் அட்டையும், தேசிய அடையாள அட்டை (ஆதார்) யையும் சேமிப்பு கணக்குடன் இணைக்க வேண்டும்.

கூட்டணி இல்லாமல்

அவசர ஊர்தி -108 திட்டத் தில் ராஜீவ்காந்தி உருவப்படம் பொறிக்க வேண்டும். 2014-ல் பாராளு மன்ற பொதுத் தேர்த லில் தமிழகத்தில் கூட்டணி இன்றி தனித்து போட்டியிட இக் கூட்டம் வலியுறுத்து கிறது. உள்ளாட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து காங்கிரஸ் பிர முகர்களுக்கும் கட்சியில் பதவி வழங்கிட வேண்டும் இவை உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டன.

இதில் ஓய்வுபெற்ற போலீஸ் அதிகாரி பெரியசாமி. நகரத்தலைவர் ஆர்.மதன், வட்டாரத் தலைவர்கள் பேட்டரி மணி, இளவரசன், அசோகன், சின்னசாமி, மாவட்ட பொதுச்செயலாளர் தேனூர் கிருஷ்ணன், செயலாளர் ராஜசேகரன், நகர செயலாளர் பாலசுப்ர மணியன், பொதுச் செயலாளர் இந்திராணி, மாநில சேவாதள பொறுப் பாளர் சிவாஜி மூக்கன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கூடலூர் பகுதியில் பருவமழை தீவிரம்: மண்சரிவு ஏற்படும் அபாயம்

கூடலூர்

கூடலூர் பகுதியில் தென் மேற்கு பருவ மழை தீவி ரம் அடைந்து உள்ளது. இதனால் மண் சரிவுகள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டு உள்ளது.

தென்மேற்கு பருவமழை தீவிரம்

நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை தீவி ரம் அடைந்து உள்ளது. கடந்த 2 வாரமாக கூடலூர் பகுதியில் இடை விடாது தொடர்மழை பெய்து வருகிறது. இதனால் கோடை காலத்தில் வறண்டு கிடந்த நீர் நிலைகளில் தண் ணீர் வரத்து அதிகரித்து உள் ளது. கூடலூர், முதுமலை வனப்பகுதிகளில் பசுமை திரும்பி உள்ளது. இதனி டையே பலத்த மழையின் காரணமாக கூடலூர் பகுதி யில் கடுங்குளிர் நிலவுகிறது.

இதேபோல் பல இடங்களில் மரங்கள் சரிந்து விழுந்து போக்குவரத்து பாதிப்புகள் ஏற்பட்டது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் இயற்கை இடர்பாடுகளை ஏற்படுவதை தடுக்க வருவாய் துறை சார்பில் முன் எச்சரிக்கை நடவடிக்கை கள் மேற் கொள்ளப்பட்டு உள் ளது.

மண் சரிவுகள் ஏற்படும் அபாயம்

தென் மேற்கு பருவ மழை யின் காரணமாக கூடலூர் ஊட்டி சாலையில் பல இடங் களில் சாலைகள் துண்டிக்கும் அபாயத்தில் உள்ளது. மேலும் கூடலூர் கேரள சாலையில் உள்ள மாநில எல்லையில் மண் சரிவுகள் ஏற்பட்டு போக்குவரத்து பாதிப்புகள் ஏற்படும் நிலை உருவாகி உள் ளது.

ஆண்டுதோறும் குறிப் பிட்ட சாலையில் நிலச் சரிவு கள் ஏற்பட்டு சாலைகள் உடைந்து போக்குவரத்து ரத் தாகி வருவதால் தற்போது பெய்து வரும் மழையால் பாதிப்புகள் ஏற்படும் அபாயம் உள்ளது.

நேற்று முன்தினம் கூட லூரில் 11.4 மி.மீட்டரும், தேவாலாவில் 78 மி.மீட்டர் மழை அளவு பதிவாகி உள் ளது.

இதே போல் பந்தலூர் தாலுகா பகுதியிலும் பலத்த மழை பெய்து வருகிறது. எனவே சம்பந்தப்பட்ட துறை யினர் நிலச்சரிவு ஏற்படும் இடங்களில் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க வேண் டியது அவசியம் என பொது மக்கள் தரப்பில் வலியுறுத்தி வருகின்றனர்.